**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 10.09.2025**

**OS.No. 71/2019**

**வழக்கு சாட்சி PW.1–பிச்சை , த/பெ.பாலுச்சாமி**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

காளியம்மாள் எனது மனைவி ஆவார் . அவர் கோயம்புத்துாரில் வசித்து வருகிறார் . வழக்கு தாவா சொத்து காளியம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான் . பொதுவாக யாரு பெயரில் சொத்து உள்ளதோ அவர்கள்தான் உரிமையியல் வழக்கு தொடுக்கமுடியும் என்றால் சரியல்ல , நான் காளியம்மாளின் கணவர் ஆவேன் . காளியம்மாள் மட்டும்தான் தாவா சொத்து தொடர்பாக வழக்கு தொடுக்கமுடியும் என்றாலும் , சொத்தில் உரிமை இல்லாத நான் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. காளியம்மாள் என்ற நபர் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக எனது அப்பா பால்ச்சாமி பழனிச்சாமி என்பவர் மீது வழக்கு தொடுத்தார் என்றால் சரிதான் , பழனிச்சாமி என் அப்பா மீது வழக்கு தொடுத்தார். பழனிச்சாமி எனது அப்பா பால்ச்சாமி மீது தொடுத்த வழக்கானது அசல் வழக்கு எண் .157/2003 என நடைபெற்று அதில் பழனிச்சாமி சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்புடையதாக தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள் எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள் தாவா சொத்து தொடர்புடைய வீட்டின் வரி ரசீதுகள் அல்ல என்றாலும் , தொடர்பற்ற ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. யார் பெயரில் பட்டா உள்ளதோ அந்த நிலத்தின் வீடு இருப்பின் பட்டாதாரர் பெயரில்தான் வீட்டுவரி ரசீதுகள்

வழங்கப்படும் என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள் தாவா சொத்து தொடர்பற்ற ஆவணம் என்றாலும் , செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.09.10 17:00:42 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.